[4th November 1957

Sri M. KALYANASUNDARAM: ஸார், மத்திய சம்பளக் கமிஷனுடைய சிபாரிசுகளின் அடிப்படையில் ராஜ்ய சர்க்கார் சிப்பந்திகளின் சம்பளமும் பரிசீலனை செய்யப்படுமென்று எதிர்பார்க்கலாமா ? அல்லது அதே அடிப்படையில் சிபாரிசு செய்வதற்கு ராஜ்ய சர்க்கார் சம்பந்தப்பட்ட வரையில் ஒரு தனி சம்பளக் கமிஷன் நியமிக்க சர்க்கார் ஆலோசிப்பார்களா?

The Hon. Sri C. SUBRAMANIAM: இதற்குக் கொஞ்சம் பொறுத்திருந்து பார்க்கவேண்டுமென்று அங்கத்தினர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். எந்த முடிவு எடுப்பதாக இருந்தாலும் அதற்குப் பெரும் தொகை செலவாகும் என்பதை அங்கத்தினர்கள் உணருவார்கள். அந்தப் பெரும் தொகையைப் பெறுவதற்கும் ஏற்பாடு செய்துகொண்டுதான் இதைப் பரிசீலனை செய்யவேண்டும். பரிசீலனை செய்வது வெகு சுலபம். அந்த முடிவை அமுலுக்குக் கொண்டு வருவது எவ்வளவு கஷ்டமென்பதையும் அங்கத்தினர்கள் உணரவேண்டும்.

Separation of Treasuries from the Revenue Department

* 75 *Q.*—**Sri M. KALYANASUNDARAM:** Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have taken a final decision regarding the recommendation of the Public Accounts Committee for separating the Treasuries from the Revenue Department; and

(*b*) if so, what the decision is and when it will be given effect to?

The Hon. Sri M. A. MANICKAVELU: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Sri M. KALYANASUNDARAM: ஸார், பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி சிபாரிசு செய்து வெகு வருஷங்களுக்கு மேல் ஆகியும் ஏன் இதுபற்றி இன்னும் ஆலோசனை செய்யவில்லை ? ஏன் இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லை. இப்படிக் காலதாமதமாகக் காரணமென்ன ? இந்த கஜானாக்களை ரெவினியு இலாகாவிலிருந்து பிரிக்க சர்க்காருக்கு உத்தேசமுண்டா ? இல்லையா ? என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU: இதைப்பற்றி ரெவினியு போர்டிலிருந்து அவர்களுடைய ரிப்போர்டை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். இப்போது இந்த கஜானாக்களை ரெவினியு இலாகாவிலிருந்து பிரித்தால் அதற்கு இன்னும் அதிகப் பணம் செலவாகும். இப்போது இருக்கும் நிதி நிலைமையை அனுசரித்துப் பின்னால் பார்த்துக் கொள்வதில் பாதகமில்லையென்று நினைக்கிறேன்.

Sri A. VEDARATHNAM PILLAI: இப்போது தாலூகா தலைநகரங்களில் கஜானா இருந்து வருகிறது. வெகு தூரத்தில் இருக்கிற கிராமவாசிகளுக்கு சர்க்காருக்குச் செலுத்தவேண்டிய பணத்தைச் செலுத்துவதற்கு சிரமம் ஏற்படுகிறது. ஆகவே ஒவ்வொரு சப்-தாலூகாவிலும், டெபுடி தாசில்தார் இருக்கக்கூடிய இடங்களில் சர்க்கார் கஜானாக்களை ஏற்படுத்த சர்க்கார் முன் வருவார்களா ? பணத்தை பட்டுவாடா செய்வதைவிட, சர்க்காருக்குச் செலுத்தவேண்டிய பணத்தை வாங்குவதற்காவது டிரஷரிகள் ஏற்படுத்துவார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU: அம்மாதிரி மிகவும் அவசியமான இடங்களில் செய்துகொண்டுதான் வருகிறோம்.

இட

4th November 1957]

Sri M. KALYANASUNDARAM : கஜானாக்களை தனியாகப் பிரிப்பதன் மூலம் அதிகச் செலவாகுமென்று குறிப்பிட்டார்கள். ஓரளவு செலவு அதிகமாகலாம். அதனால் ஏற்படும் அனுகூலம், இந்த கஜானாக்களில் ஏற்படக்கூடிய துஷ்பிரயோகத்தைத் தடுக்க முடியும் என்பதைக் கருதியாவது இவைகளைப் பிரிக்கவேண்டுமென்பது சர்க்கார் ஆலோசனையில் இருக்கிறதா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : அம்மாதிரி அனுகூலம் இருக்கலாம். ஆனால் இப்போது இருக்கும் நிதி நிலைமையில் கொஞ்சம் கஷ்டமிருப்பதை அனுசரித்து தாமதமாகப் போகவேண்டிய நிர்ப்பந்தமேற்படுகிறது என்றுதான் சொன்னேன்.

Nationalization of suburban bus routes

* 76 *Q.*—**Sri M. KALYANASUNDARAM** : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have any proposal to nationalize the bus routes in the suburbs of the Madras City ; and

(*b*) if so, when it will be given effect to?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) & (*b*) Yes, Sir, on certain routes in which the State Transport is operating, there is keen and unhealthy competition from private operators. The Government are considering whether these routes may be nationalized.

Sri M. KALYANASUNDARAM : அந்த மாதிரி எந்தெந்த ரஸ்தாக்களை, எந்தெந்த ஊர்களுக்குப் போகும் மார்க்கங்களை சர்க்காரே எடுத்துக் கொள்ளும் விஷயம் ஆலோசனையிலிருக்கிறது. இதைப் பற்றி இறுதி முடிவு எப்போது எடுக்கப்படுமென்று எதிர்பார்க்கலாம் ?

The Hon Sri R. VENKATARAMAN : ரூட் நம்பர் 56 மதராஸ்—திருவொற்றியூர், ரூட் நம்பர் 57 மதராஸ்—ரெட் ஹில்ஸ், இந்த இரண்டு ரூட்டுகளை சர்க்கார் எடுத்துக்கொள்ள நோட்டிபிகேஷன் போட்டிருக்கிறது. இதற்கு அப்ஜெக்ஷன் யாராவது சொல்லுகிறார்களா என்று பரிசீலனை செய்து காலம் முடிந்தவுடன் சர்க்கார் முடிவு செய்யும்.

Sri K. VINAYAKAM : Was not a notification published, Sir, regarding the route from Madras to Kancheepuram about nationalization of that route?

The Hon. Sri R. VENKATARAMAN : No, Sir. Ordinarily, the State Transport files its objection whenever buses radiating from Madras City are about to be licensed. There was no such notification for taking over the route entire from Madras to Kancheepuram.

Sri V. K. RAMASWAMY MUDALIAR : சென்னை நகரத்திலே போதுமான பஸ்கள் இல்லாமல் ஜனங்கள் கஷ்டப்படுவது அமைச்சருக்குத் தெரியும். சமீபத்தில் நடந்த பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியில் டைரக்டர் சொன்னார், இம்போர்ட் ரெஸ்ட்ரிக்ஷனால் போதுமான வண்டிகள் கிடைப்பதில்லையென்று. கன்னியாகுமரி ஜில்லா நம் ராஜ்யத்தோடு சேர்ந்தபிறகு அங்கு வண்டிகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. பழைய வண்டிகளைப் புதுப்பிக்க வேண்டும். இந்தக் காரணத்தால் இந்தப் பிராந்தியத்திலே வேண்டிய வண்டிகளுக்கு ஏற்பாடு செய்துவிட்டு மற்ற ரூட்டுகளை பின்னிட்டு எடுத்துக் கொள்ள சர்க்கார் யோசிக்குமா ?